# ஃபெயார்ஃபஸ்ட் தனியார் மோட்டார் கார் காப்புறுதி



fairfirst INSURANCE

A FAIRFAX Company

0112 428 428 www.fairfirst.lk Fairfirst Insurance

# வணக்கம் ∴பெயார்∴பஸ்ட் மோட்டார் காப்புறுதிக்கு உங்களை வரவேற்கின்றோம்

சிறந்த மோட்டார் காப்புறுதித் திட்டத்தைக் கொண்டிருப்பது, உங்கள் வாகனத்தை மாத்திரம் பாதிக்காமல், உங்கள் வாகனத்தினூடாக, உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாழ்க்கையின் துர்பாக்கியமான சம்பவங்களின் போது மனநிம்மதியை வழங்கும். எனவே, சிறந்த மோட்டர் காப்புறுதித் திட்டத்தை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றீர்களாயின், துரித கதியில் உரிமைகோரல்களை வழங்கும், இலகுவாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடிய மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பீர்கள். நீங்கள் எதிர்பார்க்கும் தேவைகள் இவையாக இருந்தால், ∴பெயார்∴பஸ்ட் இன்சூரன்ஸ் உங்களுக்கு மிகவும் பொருத்தமான தெரிவாக அமைந்திருக்கும்.

அது எவ்வாறு:

1. விருது வென்ற ∴பெயார்∴பஸ்ட் நிறுவனத்தின் பிரத்தியேகமான உரிமைகோரல் செலுத்தல் தீர்வான Click2Claim (C2C) ஊடாக துரித கதியில் உரிமைகோரல்களைச் செலுத்தி நேரத்தையும், சிரத்தையும் சேமிக்கின்றோம். இந்தத் தீர்வினூடாக, உங்கள் விபத்து தொடர்பில் எமக்கு அறிவித்து 5 நிமிட நேரப்பகுதியினுள் உங்கள் உரிமைகோரல் கொடுப்பனவை செலுத்தும் வசதி காணப்படுகின்றது.

2. எமது பரந்த சேவைப் பகுதிகள், WhatsApp அல்லது இணையத்தளத்தில் உடனுக்குடன் உங்கள் காப்புறுதித் திட்டத்தை கொள்வனவு செய்யுங்கள். முகவர் ஒருவரினூடாக அல்லது நாடு முழுவதிலும் காணப்படும் 58 கிளைகளிலிருந்தும் பாரம்பரிய முறையிலும் நீங்கள் காப்புறுதியைக் கொள்வனவு செய்யலாம்.

3. உங்கள் அழைப்புகளுக்கு 3 தடவை தொலைபேசி மணி ஒலிக்கும் முன்னர் பதிலளிக்கப்படும் எனும் உறுதிமொழியை நாம் உங்களுக்கு வழங்குவதுடன், 85% ஆன பிரச்சனைகளுக்கு எமது நட்பான அழைப்பு நிலைய ஊழியர்களால் முதல் அழைப்பிலேயே தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

4. 2022 ஆம் ஆண்டில் அதிகளவு விரும்பப்படும் இலங்கையின் பொதுக் காப்புறுதி வர்த்தக நாமங்கள் வரிசையில் முதல் 3 நிலைகளில் நாம் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் (பிரான்ட் ∴பினான்ஸினால் திரட்டப்பட்டு LMD இனால் வெளியிடப்பட்டது), 2023 February மாதமளவில் Facebook தரப்படுத்தலில் 5 க்கு 4.1 எனும் உயர் தரப்படுத்தலை நாம் கொண்டிருந்தோம்.

மொத்தத்தில் உங்கள் பயணத்தை எம்முடன் ஆரம்பிப்பது துரிதமானதாகவும், எளிமையானதாகவும் இருக்க வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். முக்கியமாக, நியாயமானதாக அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

fairfirst
INSURANCE
A FAIRFAX Company





இவற்றினால் நாம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள்

# FairfirstWay இல் அமைந்திருக்கும்.

**உங்கள் முன்னேற்றத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான பாதுகாப்பை வழங்குவதில் நாம் நிபுணர்களாக திகழ்வோம்:** 30 வருடங்களுக்கு மேலாக இலங்கைச் சந்தையில் இயங்கி வருவதுடன், 13.5 மில்லியனுக்கு அதிகமான வாகனங்களுக்கு நாம் மோட்டார் காப்புறுதியை வழங்கியுள்ளதுடன், ரூ. 15 பில்லியனுக்கு அதிகமான தொகையை உரிமைகோரல் கொடுப்பனவுகளாக செலுத்தியுள்ளோம்.

**எப்பொழும் எம்மை நினைவுபடுத்தும் சேவையை வழங்குகின்றோம்:** 3 தடவை தொலைபேசி மணி ஒலிக்கும் முன்னர் 100% பதிலளிப்போம் என்பதுடன் மனிதர் ஒருவரால் அது மேற்கொள்ளப்படும். எனவே, முதல் அழைப்பிலேயே எமது 85% ஆன வாடிக்கையாளர்களின் பிரச்சனைகளை தீர்க்க முடிந்திருந்தது.

**இந்த அழகிய தீவில் தனிநபர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மனநிம்மதியை வழங்குகின்றோம்:** எமது விருது வென்ற C2C வசதியினூடாக 5 நிமிட நேரத்தினுள் எளிமையான வீடியோ அழைப்பினூடாக உரிமைகோரல்கள் செலுத்தப்படுகின்றன. C2C உடன், நெருக்கடியான காலப்பகுதியிலும், ஒரு மணி நேரத்தினுள் 2500 க்கு அதிகமான உரிமைகோரல்களை செலுத்தியுள்ளோம்.

**நாம் அர்த்தமுள்ள புத்தாக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்:** அனைத்தையும் விட பெறுமதி என்பதற்கு நாம் முன்னுரிமையளிப்பதால், உங்கள் வாகனத்துக்கு பரிபூரண மோட்டார் காப்புறுதித் தீர்வு காணப்படுவதை அறிந்து மன நிம்மதியை அனுபவிக்கலாம்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company



# C2C
## Click2Claim

fairfirst INSURANCE
A FAIRFAX Company

### ஆற்றல்களுடன்
### நாட்டில் காணப்படும் துரித
### உரிமைவழங்கல் செலுத்தல்

ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் நிறுவனத்தினால் பிரத்தியேகமாக வழங்கப்படும் Artificial Intelligence இனால் வலுவூட்டப்பட்ட உரிமைகோரல் செலுத்தும் கட்டமைப்பினூடாக, உங்கள் உரிமைகோரல் தொகைகளை 5 நிமிடங்களில் துரிதமாக பெற்றுக் கொள்ள முடியும்.



# C2C

C2C என்பது உள்வைக்கப்பட்ட வீடியோ அழைப்பு மேற்கொள்ளும் வசதியைக் கொண்டிருப்பதால், உங்கள் ஸ்மார்ட்.ஃ.போனினூடாக சேத மதிப்பாய்வுகளை மெய்நிகரான முறையில் மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. வீடியோ அழைப்பை மேற்கொண்டதும், சேதமடைந்த பகுதிக்கு கமராவைக் காண்பித்து, .ஃ.பெயார்.ஃ.பஸ்ட் தொழில்நுட்ப மதிப்பீட்டாளரினால் இருக்குமிடத்தில் இருந்தவாறே அவசியமான படங்களை எடுத்து சேத மதிப்பாய்வை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். எப்பகுதியிலிருந்தும் உங்களுடன் இணைப்பை ஏற்படுத்தி, ஏற்பட்ட சேதங்களையும், இதர தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யவும் இந்த நவீன வசதிகளுடனான சேவை எமக்கு வசதியளிக்கின்றது. நீங்கள் உடன்பட்டால், உடனுக்குடன் உங்கள் உரிமைகோரல் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படும். இவை அனைத்தும் சில நிமிடங்களுக்குள் இடம்பெறும்.




எமது அழைப்பு நிலையத்துடன் 0112 428 428 ஊடாக தொடர்பை ஏற்படுத்தியவுடன், நட்பான மனிதர் ஒருவரால் 3 தடவை தொலைபேசி மணி ஒலிக்கும் முன்னர் பதிலளிக்கப்படும்.




அழைப்பின் நிறைவில் உங்களின் தொலைபேசிக்கு SMS ஊடாக link ஒன்று அனுப்பி வைக்கப்படும். இந்த மெய்நிகர் பகுப்பாய்வு link ஐ அழுத்தி, தொலைபேசியின் கமராவைக் காண்பித்த படி வாகனத்தை சுற்றி வந்து, மொபைல் திரையில் தென்படும் வகையில் அவசியமான பகுதியை காண்பிக்க வேண்டும்.




இவை அனைத்துக்கும் ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரம் தேவைப்படும். மதிப்பாய்வு பூர்த்தியடைந்ததும், பழுதுபார்ப்பு விலைமதிப்பு அறிக்கை உடனடியாக பகிரப்படும்.




அந்த தொகைக்கு நீங்கள் உடன்பட்டால், அருகாமையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company



# பணக்கொடுப்பனவில்லாத விபத்து பழுதுபார்ப்பு வசதி

பணக்கொடுப்பனவில்லாத விபத்து பழுதுபார்ப்புகளுடன், நாடு முழுவதிலுமுள்ள எமது 100க்கும் அதிகமான “A“ தர ∴பெயார்.∵பஸ்ட் பங்காளர் கராஜ்களில் நீங்கள் மேற்கொள்ளும் சகல பழுதுபார்ப்புகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு ஒரு வருட உத்தரவாதத்தைப் பெறுங்கள்.



# சம்பவ இடத்தில் மதிப்பீடு

விபத்து இடம்பெற்ற இடத்திலேயே எமது மோட்டார் பொறியியலாளர் ஒருவரினால் உங்களின் உரிமைகோரல் மதிப்பாய்வை மேற்கொள்ளுங்கள்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company



# பெறுமதி சேர்க்கப்பட்ட அனுகூலங்கள்

விபத்தொன்றின் போது மேற்கொள்ளப்படும் புத்தம்புதிய உதிரிப்பாகங்கள் மாற்றீடுகளுக்கு 3 வருடங்கள் வரை கட்டணம் அறவிடப்படாது. எவ்வாறாயினும், கட்டுப்பணத்தின் பிரகாரம் காப்புறுதியை 5 வருடங்கள வரை நீடித்துக் கொள்ள முடியும் (உதாரணம்: பழுதுபார்ப்புகளை முகவர் மேற்கொள்வார்).

உங்கள் வாகனம் லீசிங் அல்லது கடன் வசதியின் கீழ் காணப்பட்டால் மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை.

எமது சேவைகள், விபத்துடன் தொடர்புடைய உரிமைகோரல் வழங்கல்களுடன் மாத்திரம் நின்றுவிடாது நாம் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவோம்.*

*அனுகூலங்கள், தவிர்ப்புகள் பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு காப்புறுதி ஆவணத்தைப் பார்வையிடவும் அல்லது மேலதிக தகவல்களுக்கு எமது அழைப்பு நிலையத்துடன் 0112 428 428 தொடர்பு கொள்ளவும்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company



# உள்வைக்கப்பட்ட பரந்தளவு அனுகூலங்கள்

**01** வருடாந்தம் ரூ. 10,000 வரை வாகன இழுத்துச் செல்லல் (Towing) காப்பீடு

**02** ரூ. 50,000 வரை விபத்துசார் வைத்தியசாலை அனுமதிக் காப்பீடு (நோயாளர் காவு வண்டிச் சேவை அடங்கலாக)

**03** பெறுமதியின் 100% வரை Airbag காப்பீடு

**04** நாளொன்றுக்கு ரூ. 1,500 வாடகை வாகன / Taxi கொடுப்பனவு

**06** வருடாந்தம் ரூ. 1,000,000 பெறுமதியான பிரத்தியேக விபத்துக் காப்பீடு

**06** வருடாந்தம் ரூ. 10,000 பெறுமதியான விசேட முன்கண்ணாடி (windscreen) காப்பீடு

# *இந்தக் காப்புறுதியினூடாக காப்பீடு செய்யப்படாதவை எவை?

தொழில்நுட்ப அதிகாரியினால் அவதானிக்கப்பட்ட விபத்தின் போது ஏற்கனவே காணப்பட்ட சேதங்கள்.*

---

இழப்பு அல்லது சேதம் தொடர்பில் உடனடியாக காப்புறுதி நிறுவனத்துக்கு அறிவிக்காமை

---

பந்தயங்கள், பேரணிகள், கண்காட்சிகள், வேகப் போட்டிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் பிரத்தியேகப் பாவனை தவிர்ந்த விடயங்களுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்.

---

வாகனத்தில் இதர சேதங்கள் ஏற்படாதவிடத்து, டயர்கள் மற்றும் ரியுப்களில் ஏற்படும் சேதங்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு 50% க்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

---

வாகன மதிப்பிறக்கம், தேய்மானம், எந்திரவியல், இலத்திரனியல் அல்லது மின்சாதன செயலிழப்பு, பழுதுகள் அல்லது உடைவுகள் மற்றும் இதர தவிர்ப்புகள்.*

அனுகூலங்கள், தவிர்ப்புகள் பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு காப்புறுதி ஆவணத்தைப் பார்வையிடவும் அல்லது மேலதிக தகவல்களுக்கு எமது அழைப்பு நிலையத்துடன் 0112 428 428 தொடர்பு கொள்ளவும்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company





வாகனத்தின் உரிமையாளராகத் திகழ்வதுடன் அதனைப் பராமரிப்பது என்பது பெருங்காரியமாகும். எனவே, எமது சிக்கல்களில்லாத உரிமைகோரல் கொடுப்பனவுத் தெரிவுகள் மற்றும் அனுகூலங்களினூடாக அந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நாம் இயலுமானவரையில் உதவுவோம். இந்தக் காப்பீடு பற்றி மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள நீங்கள் விரும்பினால், இந்த இலக்கத்துடன் அழைப்பை மேற்கொள்ளுங்கள்.

## 0112 428 428.

மேலே காண்பிக்கப்பட்டுள்ள சகல வசதிகள் மற்றும் சேவைகள் போன்றன நாம் வழங்கும் காப்புறுதிகளின் மேலோட்டமாகும், அவை சம்பந்தப்பட்ட மோட்டார் காப்புறுதிகள் மற்றும் கம்பனி கொள்கைகளின் நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும். உங்களுக்கு காப்புறுதிப் பத்திரத்திலுள்ள விளக்கங்களை தெளிவுபடுத்துவதற்கு நாம் மகிழ்ச்சியுடன் தயாராக உள்ளோம்.

fairfirst INSURANCE
A FAIRFAX Company